# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. STC.753/2023 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw9 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **செல்வம்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

26.05.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணையில் குடியிருந்து வருகிறேன். நான் பேன்சி ஸ்டோர் நடத்தி வருகிறேன். கடந்த 2023ம் வருடம் எனது கடையில் தொப்பி முனியசாமி என்பவர் இரண்டு பெரிய பூட்டு மற்றும் ஒரு சிறிய பூட்டு ஆகியவற்றை வாங்கினார். பெரிய பூட்டின் விலை 180/– வீதம் இரண்டு பூட்டுகள், சிறிய பூட்டின் விலை 60/– ஆக மொத்தம் ரூ.420/– ஆகும்.

2) என்னிடம் காண்பிக்கப்படும் ரசீதானது நான் பூட்டை வாங்கியதற்கு ஆதாரமாக அளித்தது தான். பாலா பேன்சி ஜென்ரல் ஸ்டோர் ரசீதானது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை**

1) எனது கடையில் வாடிக்கையாளர்கள் பொருட்கள் வாங்கினால் அசல் ரசீதை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அடிக்கட்டை ரசீதை நான் வைத்து கொள்வேன் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கிற்கு நான் சமர்பித்த ரசீதானது அசல் ரசீது என்றால் சரிதான்.

2) நான் சொல்லுவது போல் வழக்கிற்காக போலீசார் என்னிடம் அசல் ரசீதை வாங்கியுள்ளனர் என்றால் சரியல்ல. நான் ஏழாயிரம்பண்ணை பஜாரில் கடை வைத்துள்ளதால் போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் போலீசாருக்கு ஆதரவாக ரசீதை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.